In the Court of the I Additional District Judge, I Additional District Court, Namakkal.

O.S. No.280/2021 நாள் : 09.09.2024

வா.சா.1 (தங்கராஜ்) அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –

நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பியுள்ளேன். எந்த தேதியில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. இந்த வழக்கை எத்தனை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆறு பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன். முத்துசாமி எனது சித்தப்பா, அடுத்த சித்தப்பா ஆறுமுகம், முருகேசன், காளியம்மாள், சரவணக்குமார், செல்வம் ஆகியோர்கள் எனக்கு உறவினர்கள். 1–ம் பிரதிவாதி இந்த வழக்கில் பதிலுரை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன விவரம் சொல்லி பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன தாக்கல் செய்துள்ளார் என்றால் ஞாபகம் இல்லை. 1–ம் பிரதிவாதி 3–ல் 1 பங்கு கேட்டு பதில் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1–ம் பிரதிவாதி அவருடைய பாகத்திற்காக நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1–ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் 3–ல் 1 பாகம் கொடுக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

**<u>3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கற்றறிந்த வழக்கறிஞர் கால அவகாசம் கேட்பதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.